# 28. கவிக்கனல் பாரதி




முனைவர் **க. கலாவதி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் 43


## முன்னுரை

கவிஞர் பெருமக்கள் வாழும் உலகம் வேறு, அவர்கள் எல்லோரையும் போல் வாழ விரும்புவதில்லை. அவர்கள் மனித சமுதாயத்தின் ஊனங்களைப் போக்கி நல்ல ஆக்கமும், ஊக்கமும், பெருமையும் போற்றிட உழைப்பவர்கள். உலகில் நீதியும் தருமமும் நிலைப்பதற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். யாக்கை நிலையாமையை உணர்ந்து தம் வாழ்நாளில் நல்ல குறிக்கோள்களுக்காகவே உழைப்பவர்கள். உலக நெறியினை அறிந்து அதன்படி நடப்பதுதான் வாழ்வின் இலட்சியம் என்று வாழும் ஆன்றோர் வரிசையில் கவிஞர் பாரதி முன்னிலையில் நிற்கிறார். கவிஞன் தன் உள்ளத்து உணர்வுகளை மெருகேற்றி கவிதைகளாக வடிக்கின்றான். அவ்வகையில் பாரதி இறைவன் மீது கொண்ட பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பெண்விடுதலை, கற்பனை கலந்த முப்பெரும் படைப்புகள், பொதுமைப் பாடல்கள் என தன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கவிதைகளாக வெளிப்படுத்தி மகாகவி எனப் பெயர் பெற்றவன். அவனது கவிதைகள் மூலம் கவிக்கனல் பாரதீ என்றுழைப்பது அவனுக்குப் புகழ்சேர்க்கும் என்றெண்ணி இக்கட்டுரையை வடிக்கின்றேன்.

"உன்னை நினைக் கையிலே எங்கள்
உள்ளத்தில் வீர வெள்ளம் பெருகுது
வண்ணக் கவிக் குயிலே முகம்
வாடித் தவிக்கும் தமிழுக்கு வான்மழை
என்ன இரங்கி வந்தாய் இருள்
இன்னல் பிளந்தினி அச்சமில்லை"

என்று சுத்தானந்த பாரதியார் கவியாற்றலைப் புகழ்ந்து பாடியுள்ளார். நமக்குத் தொழில் கவிதை



"பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்"

என்று கவி பாடி,

"சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை"

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்த மகா கவிஞன். விரித்த வானத்தின் எல்லையைக் கணக்கிட முடியாதது போல பாரதியின் கவியுள்ளத்தை இவ்வளவுதான் என்று கணக்கிட முடியாது.

"பாவின் நயமெல்லாம் யானும்
பகர வல்லேனோ?
ஆவின் பாற்சுவையை நாழி
அளந்து காட்டிடுமோ?"

என்று பாரதியின் கவித்திறத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார் தேசிக விநாயகம்பிள்ளை. தோத்திரப் பாடல்களில் தொடங்கி வசன கவிதை முடிய தன் பா திறத்தால் பிறவிக் கவிஞன் என்று புகழப்பட்டவன் பாரதி. பக்தி என்பது எப்படி இருக்க வேண்டும் என்று வரையறுக்கின்றான் பாருங்கள்.

"ஆசையைக் கொல்வோம் புலை
அச்சத்தைக் கொன்று பொசிக்கிடுவோம்
பக்தியினாலே இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ"

என்று மேன்மைகளைப் பட்டியலிடுகிறார்.

"சோர்வுகள் போகும் நற்பார்வைகள் தோன்றும்
கல்வி வளரும் பல காரியங்கள் தோன்றும்
சோம்பல் அழியும் வீம்புகள் போகும்
சந்ததி வாழும் சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்"

பக்தியினால் பரமனையும் வெல்லலாம் என்றுரைக்கின்றான் பாரதி. இறைவன் மீது அளவுகடந்த அன்பினை உடையவன். அவன் தனது பாடல்கள் மூலம் வரம் கேட்டு அவனருளைப் பெற்றவன்.

"வேதச் சுடரே மெய்யாங் கடவுளே
அபயம் அபயம் அபயநான் கேட்டேன்
சோர்வு வேண்டேன் நூறாண்டு வேண்டினேன்
உடைமை வேண்டேன் அமைதி வேண்டினேன்
வேண்டாத அனைத்தையும் நீக்கி
வேண்டியது அனைத்தும் அருள்வது உன்கடனே"

என்று கடமைகளை நிறைவேற்றத் தமக்கு ஆயுள் வேண்டும் அதற்கு உன்துணை வேண்டும் என்கிறார். மேலும் நம்பிக்கைநாயகன் தும்பிக்கையானிடம் மனத்தில் சலனமில்லாமல், மதியில் இருளே தோன்றாமல் கனக்கும் செல்வத்தோடு நீண்ட ஆயுளையும் தருவாயே என்று வரம் கேட்கிறான். தாய்நாட்டின் மீதும் தாய்மொழி மீதும் அவன் கொண்டிருந்த பற்றுக்கு அளவே இல்லை. அதனால் தான், "பாருக்குள்ளே நல்லநாடு எங்கள் பாரதநாடு" என்றும்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கு காணோம்"

என்று மார்தட்டுகின்றான் முண்டாசுக் கவிஞன்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"

என்று தமிழின் பெருமையை உலகறிய பறை சாற்றியவன் பாரதி என்றால் அது மிகையன்று.

"கன்னலும் தேனும் கனியும் இன்பாலும்
கதலியும் செந்நெல்லும் நல்கும் எக்காலும்"

என்பதன் வாழிபாரதநாடு இயற்கை வளங்கள் மலிந்தது என்பதைக் குறிப்பிடுகின்றான். ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சிக்கு அந்நாட்டின் இயற்கை வளங்களே காரணமாக அமைகின்றன. வற்றாத நதிகள் எங்கும் பாய்ந்து நம் பாரத மண்ணிற்கு உயிரூட்டியமையால் நாடு வளத்தில் சிறந்து விளங்கியது. இவ்வியற்கை வளத்தைக் கண்டே ஆங்கிலேயன் நம்மை அடிமைப்படுத்தினான்.

"என்று தணியும்இந்த சுதந்திர தாகம்
என்று மடியும்எங்கள் அடிமையின் மோகம்"

என்று ஏங்கிப் பாடிய அவன் வாயாலே,

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று"



என்று பாடிய ஞானக்கவிஞன். வேட்கைப் பாடல்கள் என்னும் நெய்யை ஊற்றி விடுதலை என்னும் வேள்வித் தீயை வளத்தவன்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என்று காளிதேவியிடம் சரணடைந்தான் பாரதி. நம் மேற்கொண்ட நற்செயலுக்கு வெற்றி வேண்டுமானால் முயற்சியோடு மனத்தில் உறுதியும், நம்பிக்கையும் கொண்டு செயல்பட வேண்டும் என்பான் பாரதி. பாரதியின் உள்ளத்தில் உருவான எதிர்கால இந்தியா உலக முழுமைக்கும் வழிகாட்டும் பேராற்றலைப் பெற்றது. புதிய பாரதம் ஒளியும் வலிமையும் இன்பமும் பெற்று பொய்மையும், தொய்மையும் நீக்கப்பெற்று சாதி மத வேறுபாடற்றது என்பதை,

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"

இக்கவிதை வரி வெளிப்படுத்துகிறான் பாரதி. இக்கால குடியரசை அன்றே கூறிய தீர்க்கத்தரிசி பாரதி ஒருவனே. பாரதி சமுதாயத்திற்கு கூறிய கருத்துக்களால் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

"நெஞ்சு பொறுக்குதிலையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
கஞ்சி குடிப்பதற்கிலார் அதன்
காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே"

என தான் வறுமையுற்றதன் காரணத்தை அறியக்கூட அறிவில்லாமல் வாழும் சமுதாயத்தை எண்ணி வருந்திப் பாடுகின்றார் சமுதாயச் சிற்பி.

"இனியொரு விதி செய்வோம் அதை

எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்று உரக்கப் பாடியவன்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து உள்ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதினும்
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை"

என்று ஒரு பண்டாரம் பாடுவதாகப் பாடி அச்சமின்மையே அடிமை வாழ்வைப் போக்கும் என்று ஒரு வீர கவிஞனாகப் பாடுகின்றான். சாதிகள் இல்லை என்றும் குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்று சாதிக்கு எதிராக குரல் கொடுத்தவன் குயில் கவிஞன். தான் ஒரு பிராமணக் குலத்தில் பிறந்திருந்தாலும் கீழ்ச்சாதி மக்களை தனக்கு நிகராகப் பாவித்தவன். உயிர்களிடத்தில் அன்பு செலுத்தினாலே உயர்வு தாழ்வு நீங்கும் என்று கூறியவன்.

"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

என்று அன்றே காதலுக்கு மரியாதை தந்தவன் பாரதி.

"இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்னும் வள்ளுவனின் அடியொற்றி பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே பகைவனுக்கு அருள்வாய் என்று பாடி மனித குலத்திற்கு விழிப்புணர்வு தந்தவன்.

பெண்களைப் போற்றப் பாடிய பெரும்புலவன் பாரதி. பெண் விடுதலைக்கு, அவன் விதைத்தவிதை இன்று ஆல்போல் தழைத்து நிற்கிறது என்றால் அப்பொருளைப் பாரதி ஒருவனுக்கே.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்"

கொண்டு அறியாமை என்னும் பேரிருளில் அழிந்து போகாமல், அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதல் பெண் அறமாகும் என்று புதுமைப்



பெண்ணின் மறத்தினைக் கூறி,

"விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"

என ஒரு தீர்க்கதரிசியாக பாடினான். அவனது தீர்க்கம் இன்று ஒரு நல்மார்க்கமாக அமைந்து விண்ணில் தடம் பதிக்கும் புதுமைப் பெண்களாகத் திகழ்கின்றனர் இக்கால மகளிர். கண்ணைத் தோழனாக, தந்தையாக, சேவகனாக, அரசனாக, சீடனாக, சத்குருவாக கற்பனை உலகில் கண்டு படி மகிழ்ந்தவன் பாரதி. இறைவனைத் தனது பன்மொழிப் புலமையால் பன்முகப் பார்வை கொண்டு தனது உற்ற உறவுகளாகக் கொண்ட உண்மைக் கவிஞன் பாரதி ஒருவனே.

"இன்னது செய்திடேல் இவரோடு பழகேல்
இவ்வகை மொழிந்திடேல் இன்னையன் விரும்பேல்
இன்னது கற்றிடேல் இன்னநூல் கற்பாய்
இன்னவர் உறவுகொள்வாய் இன்னவை விரும்புவாய்"

என்று கண்ணன் என் சீடன் என்னும் தலைப்பில் உள்ளக் கருத்தை உயரிய கருத்தாகக் கூறியிருப்பான். பாஞ்சாலி சபதம், பாரதத்தாயைப் பாஞ்சலியாக உருவகித்து, அவள் அந்நியரின் விலங்கால் கட்டுண்டு கிடப்பதைப் பாஞ்சாலியின் கதையோடு தொடர்புப்படுத்தி அமைத்துப் பாடினான் பாரதி என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். பாரதத்தின் அடிமை நிலைதான் பாஞ்சாலி சபதத்தின் கதைக்கருவாக அமைந்திருக்கிறது என்றும் இந்நிலையே பாஞ்சாலி சபதத்தின் உள்ளுறையாகவும் உருவமாகவும் அமைந்தது எனவும் இவர்கள் கூறுவார்கள்.

நீதியை நிலை நாட்டும் உயர்ந்த கொள்கை அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்றும் உண்மை ஒரு பெண் வாயிலாகப் பாரதி வெளிபடுத்தியிருப்பது பெண்ணின் விதியின் ஆற்றல், அறத்தின் வெற்றி, கற்பின் சிறப்பு இம்மூன்றும் பாஞ்சாலி சபதத்தின் வழி வெளிப்படுத்தி தன் கவித்திறனை வெளிப்படுத்தியவன் ஆத்மஞானி பாரதி.

**நிறைவாக**

"முண்டாசு கட்டுக்காரன்

முறுக்கு மீசைக்காரன்
முழுநிலவு பொட்டுக்காரன்
முத்தமிழ்ப் பாட்டுக்காரன்
முற்போக்கு சிந்தனைக்காரன்
முப்பெரும் படைப்புக்காரன்"

என்று புகழப்படும் பிறவிக் கவிஞனை நினைவில்
அவன் புகழ்ப்பாடுவோம்.

"பாரதி என்றோர் யுகப் புலவன் கவிப்
பண்பின் கலந்த கனல்தெறிக்க
வீரத் தமிழர்கள் உள்ளத்திலே அவன்
வீற்றிருக்குமாறு போற்றுங்களேன்"

பாரதியின் பா நலம் விரிந்தது, உயர்ந்தது, பரந்தது. எவ்வளவுக் கெவ்வளவு அதிக ஆழத்தில் செல்கிறோ அவ்வளவுக்கவ்வளவு நல்ல முத்துக்களைப் பெ அதுபோல பாரதியின் படைப்புக்களை நாம் உ ஆழ்ந்து கற்றால் முத்தான இலட்சிய கருத்துக்களை பெறமுடியும். அவன் கவிதைகள் இன்றும் இந்திய மன் தமிழர்கள் மனத்திலும் எண்ணத்திலும் க கொண்டிருப்பதால் அவன் என்றும் இறவாப் கொண்டவனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான் என் ஐயமில்லை.